செ.வெ.எண்: 21 நாள்: 18.08.2020

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கரூர் மாயனூரில் உள்ள புதிய கட்டளை மேட்டு கால்வாயினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் திறந்துவைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கரூர் மாயனூரில் உள்ள புதிய கட்டளை மேட்டு கால்வாயில் இருந்து நடப்பாண்டு பாசனத்திற்கான நீரினை இன்று (18.08.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா முன்னிலையில் திறந்துவைத்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மேட்டூர் அணையில் இருந்து புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு கல்வாய்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்ற விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புள்ளம்பாடி மற்றம் புதிய கட்டளை மேட்டு கால்வாய்களில் நடப்பாண்டு பாசனத்திற்காக 18.08.2020 முதல் 31.12.2020 வரை 136 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (18.08.2020) புதிய கட்டளை மேட்டு கால்வாயில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. புதிய கட்டளை மேட்டு கால்வாய், மாயனூர் கட்டளை கதவணையிலிருந்து தொடங்கி கரூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இவ்வாய்க்காலின் மொத்த நீளம் 134 கி.மீ இவ்வாய்க்கால் மாயனூரில் தொடங்கி கரூர் மாவட்டத்தில் 60 கி.மீ தூரமும், திருச்சி மாவட்டத்தில் 53 கி.மீ தூரமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 21 கி.மீ தூரமும் சென்று இறுதியில் தஞ்சாவூர் மாவட்டம், திருமலை சமுத்திரம் கிராமத்தில் அருகில் உள்ள பிடாரி ஏரியில் முடிவடைகிறது. இவ்வாய்க்காலில் 28 பிரிவு வாய்க்கால்கள் மற்றும் 22 வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றின் மூலம் பாசன நீர் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இவ்வாய்க்கால் மூலம் திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட பகுதிகளில் பாசனம் நடைபெறுகிறது. கரூர் மாவட்டத்தில் இந்த வாய்க்கால் கடந்துசெல்லக்கூடிய 60 கி.மீ தூரமும் பாசன பரப்பு இல்லா வாய்க்காலாகவே அமைந்துள்ளது. இவ்வாய்க்கால் மூலம் திருச்சி மாவட்டத்தில் 16,164 ஏக்கர் விளை நிலங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,491 ஏக்கர் விளைநிலங்களும் பாசனம் பெறுகின்றன.

விவசாயிகளுக்கு குடிமராமத்து என்ற உன்னதமான திட்டத்தை வழங்கி, குடிமராமத்து நாயகனாக மக்கள் மனதில் வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திறக்கப்பட்டுள்ள இந்த கால்வாயின் மூலம் பகிர்ந்தளிக்கப்படும் நீரை விவசாயப் பெருமக்கள் சிக்கனமாகப் பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு, உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காவிரி ஆற்றுபாதுகாப்பு உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.வெங்கடேஷ், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி சந்தரமதி, உதவிபொறியாளர்கள் திரு.கார்த்திக், திரு.ஸ்ரீதர், கூட்டுறவு சங்கபிரதிநிதி திரு.பொரணி கணேசன் உள்ளிட்ட பலர் கலந்துகோண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்**